## TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION

**Press Release No.28/2020** **Date: 01.10.2020**

The Tamil Nadu Public Service Commission in its Notification No.19/2019 dated 14.06.2019 had invited applications for selection of candidates for appointment by direct recruitment to the posts included in Combined Civil Services Examination-IV (Group-IV Services) 2018-2019 and 2019–2020. The Written Examination was held on 01.09.2019 and results published on 12.11.2019. In order to verify the genuineness of claims of the candidates made in their on-line applications regarding age, qualification, Technical qualification, community etc and to fill up the vacancies, Original Certificate Verification cum Counselling for the post of Typist was originally scheduled from 20.03.2020 to 31.03.2020 and for the post of Steno Typist Grade III from 02.04.2020 to 07.04.2020

Due to the outbreak of COVID – 19, the Original Certificate Verification and Counselling for the posts of **Typist** and **Steno Typist Grade III** was postponed. Due to relaxation of Lockdown, the Original Certificate Verification and Counselling for the post of Typist is scheduled to be held from 02.11.2020 and for the post of Steno Typist Grade III from 28.11.2020 at the O/o Tamil Nadu Public Service Commission, TNPSC Road, (Near Broadway Bus stand) Chennai – 600 003. The candidates will also be informed through SMS and Email regarding the date and time separately. No individual memo will be sent to the candidates by post.

The Candidates should bring all the original Certificates as per their claim in their online applications and also directed to attend the original Certificate Verification cum Counselling on the scheduled date / time without fail.

Date: 01.10.2020 Secretary

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

செய்தி வெளியீட்டு எண்:28/2020 நாள்: 01.10.2020

ஒருங்கிணைந்த குடிமைப்பணிகளுக்கான தேர்வு-IV (தொகுதி IV-ல் அடங்கிய பதவிகள்) 2018-2019 மற்றும் 2019-2020- [Combined Civil Services Examination-IV (Group-IV Services)]- இல் அடங்கிய பதவிகளுக்கு நேரடி நியமனம் செய்யும் பொருட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், 14.06.2019 ஆம் நாளிட்ட அறிவிக்கை எண்.19/2019 வாயிலாக விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டன. இப்பதவிகளுக்கான எழுத்துத் தேர்வு கடந்த 01.09.2019 அன்று நடைபெற்று, எழுத்துத் தேர்வில் விண்ணப்பதாரர்கள் பெற்ற மதிப்பெண் விவரங்கள் 12.11.2019 அன்று வெளியிடப்பட்டது.

இத்தெரிவில் உள்ள தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-III பதவிகளுக்கான மூலச் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு தேர்வாணைய அலுவலகத்தில் முறையே 20.03.2020 முதல் 31.03.2020 வரை மற்றும் 02.04.2020 முதல் 07.04.2020 வரை நடைபெற இருந்தது.

கொரோனா வைரஸ் நோய்த்தொற்று காரணமாக இவ்விரு பதவிகளுக்கான சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு ஒத்தி வைக்கப்பட்டது. தற்போது தட்டச்சர் பதவிக்கான மூலச்சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு 02.11.2020 முதல் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-III பதவிக்கான மூலச்சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு 28.11.2020 முதல் தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

விண்ணப்பதாரர்களுக்கு தேதி மற்றும் நேரம் குறித்து SMS மற்றும் email மூலமாக தனியே தகவல் தெரிவிக்கப்படும். விண்ணப்பதாரர்கள் தங்களது இணையவழி விண்ணப்பத்தில் கோரிய கல்விச்சான்று மற்றும் அனைத்து இன்றியமையாத சான்றிதழ்களை நேரில் கொண்டு வர வேண்டும். விண்ணப்பதாரர்களுக்கு கலந்தாய்வு அழைப்பாணை தனியே தபால் மூலம் அனுப்பப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நாள் 01.10.2020 செயலாளர்